உதவிகளைச் செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற இந்தக் கருத்தை இந்த அரசு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 36, செல்வி க. பாலபாரதி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

36–

மானியத் தொகை

***16268–செல்வி க. பாலபாரதி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

ஊனமுற்றோருக்கு கடன் வழங்கும் மானியத் தொகை ரூ.2,000/– என்பதை உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூல நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் மானியத் தொகை ரூ.2,000/–ஐ உயர்த்தி வழங்கும் கருத்துரு எதும் அரசின் பரிசிலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஊனமுற்ற இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் மூலமாக ஆண்டிற்கு 200 பேருக்கு மட்டும்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதியோருக்கான உதவித் தொகை என்பது வழங்கப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு அரசிடம் நடவடிக்கை இல்லையென அறிகிறேன். அந்தத் துறையினுடைய அதிகாரிகள் அவ்வாறு தெரிவிக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் ஊனமுற்றோர்களுக்கான இரண்டு சதவிகிதம் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பு என்பதும் அவர்களுக்கு கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவர்கள் கடன் உதவி பெற்று ஏதாவது தொழில் தொடங்கலாம் என்று முயற்சி செய்கிறபோது, வங்கிகளில் கடன் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில்தான் இந்த ரூ.2,000/— மானியத் தொகை என்பதை

இன்றைக்கு அரசு வழங்கி வருகிறது. இந்த உதவி கிடைக்கக்கூடியவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்றால், இந்த மானியத் தொகையைக் குறைந்தபட்சம் ரூ.3,000/– ஆக உயர்த்தித் தர வேண்டும். அதை எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். ஊனமுற்றோருக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை அந்தந்த மாவட்ட மறுவாழ்வு அலுவலர்களிடத்தில் விண்ணப்பிக்கிறபோது வட்டாட்சியரிடத்திலே சான்றிதழ் பெற்று வந்ததற்குப் பிறகு அவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதில் எந்தவிதமான சிரமும் இல்லாமல் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் 2002–2003 ஆம் ஆண்டு பயன்பெற்றிருக்கின்ற பயனாளிகள், இந்த மானியத் தொகையின் மூலமாகக் கடன் பெற்று வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறவர்களின் எண்ணிக்கை 1050 பேர். இதற்கென 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் மூலம் கடன் வாங்கக்கூடிய அத்தனை பயனாளிகளும் பயனடையக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. தேசிய உடல் ஊனமுற்றோர் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தமிழக அரசிடமிருந்து கடன் கொடுப்பதற்கு உத்தரவாதம் கேட்டு பல ஆண்டுகளாக நிலுவையிலிருந்த அந்த அரசு உத்தரவாதத்தை தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனித நேயத்தோடு அணுகி 4 கோடி ரூபாய் வழங்கக்கூடிய மத்திய அரசின் நிதிக்கு தமிழக அரசும் உத்தரவாதம் தந்து அவர்களுக்கு கடன் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாகக் கூறவில்லை. என்னுடைய திண்டுக்கல் மாவட்டத்தினுடைய அதிகாரியைச் சந்தித்தபோது, ஆண்டிற்கு 200 ஊனமுற்றோர்களுக்குத்தான் நாங்கள் உதவித் தொகை தர முடியும் என்று குறிப்பிட்டார். அந்த வயது 14 லிருந்து 40–க்கு உட்பட்டவர்கள் என்று அவர்கள் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அந்த தகவலைத்தான் நான் குறிப்பிட்டேன். 40 வயதுக்கு மேற்பட்ட ஊனமுற்றோர்களுக்கு

2002 அக்டோபர் 28]

மாவட்ட வறியோர் நிவாரணத் துறையின் மூலமாக வழங்கப்படுகிறது. ஆகவே, இந்த இரண்டு துறைகளிலும் ஊனமுற்றோர்களுக்கான உதவித் தொகை என்பது கிடைப்பதற்கு அந்தத் துறை முயற்சி செய்கிறது. ஆனால், ஊனமுற்றவர்கள் இரண்டு துறைகளுக்குமாக அலைக்கழிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த ஊனமுற்றோர்களுக்கான உதவித் தொகையை 14 வயதிலிருந்து 40 வயதுக்குட்பட்டவர்களுக்கும், 40 வயதிற்கு மேலிருந்த முதியோர், ஊனமுற்றோர்களுக்கும் ஒரு துறையின் மூலமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோர்கள் பலவிதமாகப் பிரிக்கப்படுகிறார்கள். கடுமையான ஊனமுற்றோர், வாழ்க்கையில் எந்த பிழைப்புமே செய்ய முடியாமல், ஓரேயிடத்தில் அமர்ந்துகொண்டிருக்கிறவர்களுக்கு மட்டும்தான் முன்னுரிமை கொடுத்து, உதவித் தொகை உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்குத் தரக்கூடியவற்றிற்கு அவர்கள் அலைக்கழிக்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஏதும் அலைக்கழிக்கப்படுவதாக அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. ஏதாவது ஒரு பகுதியிலே அவர்களுக்கு வருமான சான்றிதழ் வழங்குகிறபோது அவர்கள் தவறான தகவல்களை அரசுக்குத் தந்திருப்பார்களேயானால் காலதாமதமாகியிருக்குமேதவிர, உண்மையிலேயே ஊனமுற்றோர்களுக்கு உதவித் தொகை வழங்குவதில் எந்தவிதமான காலதாமதமும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இல்லையென்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூல நலத் துறையின் மூலமாக இந்த இரண்டு பெண் குழந்தைகள் பிறந்து அவர்கள் ஆப்பரேஷன் செய்துகொண்டார்கள் என்று சொன்னால் சில சலுகைகளை அரசு அறிவித்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. வினா எண் 37, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.